# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,**
**அவர்கள் முன்பாக**

************

முறையீட்டு மனு எண். 0193 /2015

ஆணை எண். 035 /2016

நாள்: 23 / 03 /2016

சால்ட் எஸ்.லெட்சுமணன்,
2வது வார்டு உறுப்பினர்,
ஆறுமுகநேரி பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம் — **முறையீட்டு மனுதாரர்**

செயல் அலுவலர்,
ஆறுமுகநேரி பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். — **எதிர் மனுதாரர்**

தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரி பேரூராட்சியைச் சேர்ந்த திரு.சால்ட் எஸ்.லெட்சுமணன் அவர்களிடமிருந்து பெறப்பட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் **01.09.2015** அன்று பெறப்பட்டு **0193/2015** எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆணை**

தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரி பேரூராட்சி பகுதியைச் சேர்ந்த திரு.சால்ட் எஸ்.லெட்சுமணன் என்பவரிடமிருந்து முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில், பேரூராட்சி மன்ற கூட்டத்திற்கான பொருள் நிரலில் (Agenda) சேர்க்கப்படாத பொருள்கள் மன்றக் கூட்டம் முடிந்த பின்பு சேர்க்கப்படும் நடைமுறை பின்பற்றப்படுகிறது என இம்முறை மன்ற நடுவத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக செயல் அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. பரிசீலனைக்குப் பின் முறையீடு சம்பந்தமாக மனுதாரரிடம் விசாரிக்கும் பொருட்டு **18.01.2016** அன்று

விசாரணைக்கு அழைக்கப்பட்டார். விசாரணையின்பொழுது மனுதாரர் கூடுதல் விவரங்கள் அளிக்க விரும்பியதால் 10 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது. இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் மனுதாரரிடமிருந்து கூடுதல் விவரங்கள் வரப்பெறவில்லை. எனவே மேற்படி முறையீடு சம்பந்தமாக மனுதாரரால் கூடுதல் விவரங்கள் அளிக்க இயலவில்லை, ஆறுமுகநேரி பேரூராட்சியின் செயல் அலுவலரிடம் விசாரணை செய்யப்பட்டது. விசாரணையின் பொழுது செயல் அலுவலர் கீழ்காணும் விளக்கத்தினை அளித்துள்ளார்.

"ஆறுமுகநேரி பேரூராட்சியில் அஜெண்டாவில், இறுதியில் மன்ற கூட்டத்தின் போது தலைவர் அவர்கள் கொண்டுவரும் இதர பொருட்களும் இதில் அடங்கும் என்ற வாசகங்கள் அச்சிட்டு அஜெண்டா நகல்கள் மன்ற உறுப்பினர்களுக்கு சார்வு செய்யப்படுகிறது " என்றும்,

"அஜெண்டாவில் குறிப்பிடப்படாத பொருட்கள் என்பது உறுப்பினர்களால் கொண்டுவரப்படும் அல்லது எழுப்பப்படும் பொருட்கள் ஆகும் என்றும், இத்தகைய பொருட்கள் மீது சட்ட விதி–முறைகளுக்குட்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது". "புகார் மனுதாரர் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு காரணமாக மன்ற கூட்டங்களில் கலந்து கொள்வதை தவிர்த்து வருவதாகவும், இதனால் தான் புகார் மனு அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது".

மேலும் மனுதாரர் தனது குற்றச்சாட்டுக்கு முறையான ஆதாரங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. இந்நிலையில் மனுதாரரின் முறையீட்டு மனுவை நிராகரிக்கலாம் எனக் கருதி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2016 ம் வருடம் மார்சு மாதம் 23 ஆம் நாளன்று கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் வெளியிடப்படுகிறது

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலருக்காக

பெறுநர்
1. சால்ட் எஸ்.லெட்சுமணன்,
   2வது வார்டு உறுப்பினர்,
   ஆறுமுகநேரி பேரூராட்சி,
   தூத்துக்குடி மாவட்டம்

2. செயல் அலுவலர்,
   ஆறுமுகநேரி பேரூராட்சி,
   தூத்துக்குடி மாவட்டம்.